செ.வெ.எண்:10 நாள்: 6.11.2017

# பத்திரிக்கைச்செய்தி

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ராம்சந்த் பகுதியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தில் இலவசமாக அப்பளம், ஊறுகாய் மற்றும் மசாலா பொடி தயாரிக்கும் பயிற்சி 2017 நவம்பர் மாதம் 9ம் தேதி துவங்கி 10-நாட்கள் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் 8ம் வகுப்பு படித்தவர் தொடங்கி பட்டபடிப்பு முடித்தவர்கள் வரை பங்கேற்கலாம். வயது வரம்பு 18 முதல் 45 வரை இருக்க வேண்டும்.

இப்பயிற்சியின் போது பயிற்சிக்கான உபகரணங்கள், தேனீர், காலை மற்றும் மதிய உணவு ஆகியவை இலவசமாக வழங்கப்படும். மேலும் பயிற்சி முடிந்தவுடன் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தப்பயிற்சியில் சேர விரும்பும் நபர்கள் தங்களது பெயர், முகவரி, கைப்பேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கோத்தகிரி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தினை நேரில் அணுகி அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை விண்ணப்பம் பெற்று சமர்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தகவல் தேவைப்படுவோர் கோத்தகிரி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தின் இயக்குனர் வசந்த்குமார் அவர்களுக்கு 9629663764 மற்றும் 04266-273051 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன் அடையுமாறு நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**ஒம்/- ஜெ. இன்னசென்ட் திவ்யா,**
மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.

/ உண்மை நகல் / உத்தரவுப்படி /

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.